வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 8.4.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள இரண்டாம் கட்ட மக்களவைத் தேர்தலில், ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள, கடைசி நாள், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

மக்களின் கனவுகளே மோடியின் உத்தரவாதம் என்று பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பழங்குடி மக்களே நாட்டிற்கும் நிலத்திற்கும், முதல் உரிமையாளர்கள் என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறி உள்ளார்.

நாட்டின் வளர்ச்சியே, தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முக்கிய குறிக்கோள் என்று, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

வேட்பு மனு

கேரளா-கர்நாடகா உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 மக்களவைத் தொகுதிகளில், வரும் 26-ஆம்

தேதி நடைபெற உள்ள இரண்டாம் கட்ட மக்களவை தேர்தலில், ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள கடைசி நாள், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது இதைத் தொடர்ந்து இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படுகிறது.

இதற்கிடையே, புதுச்சேரி, தமிழ்நாடு உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறவுள்ள **முதல் கட்ட மக்களவை தேர்தலு**க்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் உச்ச கட்ட தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மோடி

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று சட்டீஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் பழங்குடிப் பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், மக்களின் கனவுகளே மோடியின் உத்தரவாதம் என்றும், நாட்டை முன்னேற்றி, பழங்குடி குடும்பங்கள் உட்பட ஒவ்வொரு குடும்பத்தையும் வளமாக வாழ வைப்பதே தமது குறிக்கோள் என்றும் கூறினார்.

மத்தியில் உள்ள பிஜேபி அரசு கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்தி இருப்பதாகவும், ஆயுஷ்மான்

பாரத், இலவச ரேஷன் போன்ற திட்டங்களால், மக்களின் வாழ்க்கைச் செலவு குறைந்து, சேமிப்பு அதிகரித்து இருப்பதாகவும், பிரதமர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் 25 ஆயிரம் கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், ஏழைகளின் உரிமை மேம்பாட்டிற்கு, பஸ்தார் பகுதியே மிகச் சிறந்த எடுத்துக் காட்டு என்றும் அவர் கூறினார்.

முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் அடையாளமாக திகழ்ந்ததே ஊழல் தான் என்றும், ஏழைகளைப் பற்றி காங்கிரஸ் ஒருபோதும் கவலைப் பட்டது இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மோடி-விதர்பா*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை மகாராஷ்டிர மாநிலம் **சந்திரபூரில், சந்திரப்பூர்** மற்றும் **காட்சிரோலி** மக்களவைத் தொகுதி பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். மாநில பிஜேபி மற்றும் மகாயுதி கூட்டணியின் தலைவர்களும், பிரதமரின் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 10-ஆம் தேதி ராம்டேக் மக்களவைத் தொகுதியிலும், மகாயுதி கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

*ராகுல்காந்தி*

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, மத்திய பிரதேஷ் மாநிலம், சியோனி மாவட்டத்தில் உள்ள தனாரா பகுதியில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். பழங்குடி மக்களே இந்நாட்டிற்கும் நிலத்திற்கும், முதல் உரிமையாளர்கள் என்றும், இதனால் தான் காங்கிரஸ் இவர்களை ஆதிவாசி என்று அழைப்பதாகவும் அவர் கூறினார். இந்த உரிமைகளை மறுக்கும் வகையில் தான், பிஜேபி, பழங்குடி மக்களை வனவாசி என்று அழைப்பதாக அவர் குறிப்பிட்டார். திரு ராகுல்காந்தி இன்று மத்திய பிரதேஷ் மாநிலம் ஷாதோல் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

*அனுராக்*

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 10 ஆண்டு பதவிக் காலத்தில் தான், அதிகபட்ச அளவில் நேரடி அன்னிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அனுராக் தாக்கூர் கூறி உள்ளார். இன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பல்வேறு திட்டங்களால் அனைத்து பிரிவு மக்கள் பயன்பெற்றுள்ளதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி உயர் நிலையை எட்டி உள்ளதாகவும் கூறினார். மீனவர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை, பிரதமர் திரு நரேந்திர மோடி, அமல்படுத்தி

இருப்பதாக, திரு அனுராக் தாக்கூர் தெரிவித்தார். கச்சத் தீவு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டதற்கான காரணங்களை, திமுக-வும் காங்கிரஸ் கட்சியும் வெளிப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இதற்கிடையே, திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி செய்தியாளர்களிடம் பேசுகையில், தேர்தல் காலத்தில் அரசியல் ஆதாயத்திற்காகவே கச்சத் தீவு பிரச்சனையை பிஜேபி எழுப்புவதாக கூறினார். கச்சத் தீவு பிரச்சனையில் திமுக ஒரு போதும் மவுனம் காத்தது இல்லை என்றும், கட்சி இப்பிரச்சனையை பல முறை மத்திய அரசிடம் எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*அனுராக்-சேர்க்கை*

முன்னதாக மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர், இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் இன்று சென்னையில், தமிழ் ஜனம் தொலைக்காட்சியை தொடக்கி வைத்தனர். தரமான செய்திகளை மக்களுக்கு வழங்க உள்ளூர் மொழியில் தொலைக்காட்சி அலைவரிசைகளை தொடக்க தேவை இருப்பதாக, திரு அனுராக் தாக்கூர் நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். புதிய தொலைக்காட்சி அலைவரிசை, தொழில் முறைத் தரத்துடன், செய்திகளையும், தேசிய வாத கருத்துக்கள் மற்றும் தமிழ் அடையாளம் பற்றிய நிகழ்ச்சிகளையும் ஆன்மிக நோக்கில் மக்களுக்கு வழங்கும் என அவர் தெரிவித்தார். தமிழகத்திற்கு வளமான

வரலாறும், கலை-கலாச்சார பாரம்பரியங்களும் இருப்பதாக டாக்டர் எல் முருகன் துவக்க உரையில் கூறினார். உலகின் தொன்மையான மொழியான தமிழை பிரதமர் திரு நரேந்திர மோடி, உயர்த்தி பிடித்து வருவதாக அவர் தெரிவித்தார். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் கூற்றை அவர் நினைவு கூர்ந்து, நாட்டின் வலிமைக்கு தேசியமும், தெய்வீகமும், தமிழும் மிக முக்கியம் என்றார்.

*ராஜ்நாத் சிங்*

நாட்டின் வளர்ச்சியே, தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முக்கிய குறிக்கோள் என்று, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இன்று நாமக்கல்லில் சாலை பவணி நடத்திய அவர் கடந்த 10 ஆண்டுகளாக நாட்டின் வேளாண்மை, உள்கட்டமைப்பு எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம் நன்கு வளர்ச்சி அடைந்து வருவதாகத் தெரிவித்தார். நடப்பு மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 400-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் என்றும், கூட்டணியின் 3-ஆவது பதவிக் காலத்தில் உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்படும் என்றும் அவர் கூறினார். தொடர்ந்து திரு ராஜ்நாத் சிங் இன்று திருவாருர் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ்

நாட்டை மத ரீதியில் பிளக்க பிஜேபி முயலுவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டி உள்ளது. பாரதிய ஜனதாவின் தேர்தல் பிரச்சாரத்தில் 10 ஆண்டின் செயல்பாடுகளை சொல்லாமல் சமூகங்களுக்கு இடையில் பிளவு ஏற்படுத்தவே முயற்சிகள் நடப்பதாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திருமதி சுப்ரியா ஸ்ரீநாதே இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் முஸ்லீம் லீக்கின் சுவடுகள் இருப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி இருப்பதையும் அவர் கடுமையாக சாடினார். இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை, காங்கிரஸ் அறிக்கையா, முஸ்லீம் லீக் அறிக்கையா என்பதே புரியவில்லை என்று, பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா கூறி உள்ளார்.

கவிதா

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பான பணச் சலவை வழக்கில் அமலாக்கத் துறையினால் கைது செய்யப்பட்ட மூத்த BRS தலைவர் திருமதி கவிதாவிற்கு இடைக்கால ஜாமீன் வழங்க டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. மகனுக்கு தேர்வுகள் நடப்பதால் இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும் எனக் கோரி திருமதி கவிதா கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தை அணுகி இருந்தார்.

அமலாக்கத் துறையின் இம்மனுவை ஆட்சேபித்து சாட்சியங்களை அவர் கலைத்திருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

*ஆம் ஆத்மி*

இதற்கிடையே, டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில், கடந்த வாரம் உச்சநீதி மன்றத்தால் ஜாமின் அனுமதி வழங்கப்பெற்ற மூத்த ஆம் ஆத்மி தலைவர் திரு சஞ்சய் சிங், மத்தியில் உள்ள பிஜேபி அரசு, தேர்தல் பத்திரம் என்ற பெயரில் ஊழல் புரிந்திருப்பதாக குற்றம் சாட்டி உள்ளார். பாரதிய ஜனதாவிற்கு நன்கொடை கொடுத்த நிறுவனங்களுக்கு வரிச் சலுகை வழங்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். கடந்த 7 ஆண்டுகளில் மொத்தம் 1 லட்சம் கோடி ரூபாய் நஷ்டம் காட்டி உள்ள 33 நிறுவனங்கள், பாரதிய ஜனதாவிற்கு 450 கோடி ரூபாய் நன்கொடை அளித்து இருப்பதாகவும், சில நிறுவனங்கள் தங்களின் லாபத்தை விட அதிக அளவில் நன்கொடை வழங்கி இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டி உள்ளார்.

*விக்கிரவாண்டி*

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காலியாக உள்ளதாக தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகம் தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதி

உள்ளது. திமுக சட்டமன்ற உறுப்பினர் திரு புகழேந்தி கடந்த 6-ஆம் தேதி திடீரென காலமானதைத் தொடர்ந்து இத்தொகுதி காலியாயிற்று.

*தற்செயல் கலப்பு*

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் 26 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், மின்னணு வாக்குப்பதிவு இயந்திங்களை, தேர்தல் ஆணையத்தின் மென்பொருளைப் பயன்படுத்தி, 2-ஆம் கட்டமாக **தற்செயல் கலப்பு** செய்யும் பணிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்றன. தேர்தல் நடத்தும் அதிகாரி திரு குலோத்துங்கன், தேர்தல் ஆணையத்தின் பொதுப் பார்வையாளர்கள் திரு பியூஷ் சிங்லா, திருமதி அசித்தா மிஸ்ரா ஆகியோர், முன்னிலையில் நடைபெற்ற இப்பணிகளின் போது அனைத்து 30 சட்டமன்ற பிரிவுகளுக்கு உட்பட்ட 967 வாக்குச் சாவடிகளுக்கும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் விவி-பேட் காகித தணிக்கை இயந்திரங்கள், 2-ஆம் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. மக்களவை தேர்தலுக்கான காவல் பார்வையாளர் திரு அமர்தீப் சிங் ராய், உதவி ஆட்சியர் திரு யஷ்வந்த் மீனா, மாவட்ட துணை தேர்தல் அதிகாரி திரு வினய் ராஜ் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் இதில் பங்கேற்றனர்.

*வானிலை*

தமிழகம்,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு, அதிக பட்ச வெப்பநிலை இயல்பை விட அதிக அளவில், மாற்ற மின்றி நீடிக்கலாம் என்றும், அதற்கடுத்த 4 நாட்களில், வெப்பநிலை, 3 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடதமிழகத்தின உள் மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு, வெப்ப அலை வீசக் கூடும் என்றும், வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் போது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதிய நிலவுவதால் இன்றும், நாளையும் தென் தமிழக மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் இதர பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில், சென்னை-கொல்கத்தா அணிகள் மோத உள்ளன. நேற்று, லக்னோ-குஜராத் அணிகளுக்கு இடையே,

லக்னோவில் நடைபெற்ற போட்டியில், லக்னோ அணி, 33 ரன் வித்தியாசத்திலும், டெல்லி-மும்பை அணிகளுக்கு இடையே, மும்பையில் நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 29 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன.

*முப்படை மாநாடு*

முப்படைகளில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவ்கான் தலைமையில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற **பரிவர்த்தன் சிந்தன்** மாநாட்டில், முப்படைகளுக்கு உட்பட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும், ராணுவ விவகாரங்கள் துறை, மற்றும், பாதுகாப்பு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த தலைமையகத்தின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். எதிர்காலப் போர்களை முப்படைகளும் ஒருங்கிணைந்து எதிர்கொள்ளத் தேவையான தயார் நிலையை மேம்படுத்தும் வகையில், முப்படைகளிலும் புரட்சிரமான, முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள இரண்டாம் கட்ட மக்களவைத் தேர்தலில், ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள, கடைசி நாள், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது.

மக்களின் கனவுகளே மோடியின் உத்தரவாதம் என்று பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பழங்குடி மக்களே நாட்டிற்கும் நிலத்திற்கும், முதல் உரிமையாளர்கள் என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறி உள்ளார்.

நாட்டின் வளர்ச்சியே, தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முக்கிய குறிக்கோள் என்று, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/8.4.2024/Script/

-------------------------